

சங்கீத பூஷணம் திரு செ. குமாரசாமி அவர்களின்

# இசைவாழ்வும் பணியும்



கலாபூஷணம் திரு எல். திலகநாயகம் போல் அவர்களின்

ஞாபகார்த்தக் கையேடு - 3

2017


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாபூஷணம் திரு. எல். திலகநாயகம் போல் அவர்களின்
8ஆம் ஆண்டு ஞாபகார்த்தமாக
10.12.2015 அன்று
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலாமண்டபத்தில்
நிகழ்த்தப்பட்ட

# "திலகார்ப்பணம்"

நிகழ்வின் போது வெளியிடப்பட்டது.




தொகுப்பாளர் :

**கலாவித்தகர். திருமதி. குமுதா. உமாகாந்தன்**

ஆசிரியர்
யா/ சென்ஜோண்ஸ் கல்லூரி
"சோமராகம்"
நல்லூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முன்னுரை

"குருவேசரணம்" என குருவைப் போற்றிப்பணிந்து தனது இசை நிகழ்ச்சிகளை நடாத்திக் காட்டியவர் எனது குருவான **"செவ்விசைச் செம்மல்" – சங்கீதபூஷணம் திரு எல்.திலகநாயகம்** போல் அவர்கள். அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவாக 10.12.2017 ஞாயிற்றுக்கிழமை அன்று நடாத்தப்படும் **"திலகார்ப்பணம்"** நிகழ்வில் மூத்த இசைக்கலைஞரும், எனது குருவிற்கு மிகவும் விருப்பிற்குரிய நண்பருமான "வடமராட்சி" சங்கீதபூஷணம் திரு.செ.குமாரசாமி அவர்களை கௌரவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

மேலோட்டமான பரீட்சை மையக் கல்வியும், பரீட்சைப் புள்ளியும் மட்டும் போதும் எனும் எண்ணப்பாங்கு மேலோங்கி அனைத்தையும் ஆழ்ந்தும், ஆய்ந்தும் கற்கும் தன்மை அருகி வருகின்றது. ஆழமாகவும் நுட்பங்களை அறிந்தும் கற்பதற்கு "குருவானவர்" மிகவும் அவசியம். எமது மூத்த இசைக்கலைஞர்களை கௌரவிப்பதனூடாக மாறிவரும் இன்றைய சமுதாயத்தினரிடையே எமது மூத்த கலைஞர்களின் கலைச்சிறப்பை, சேவையை உணர்த்தவும், குருவைப்போற்றும், பண்பையும், பெரியோரைக் கனம் பண்ணும் பண்பையும் நடைமுறையில் கற்பிக்கவும் முடியும் என்ற நம்பிக்கையில் ஆரம்பிக்கப்பட்டதே **"திலகார்ப்பணம்"** நிகழ்வாகும்.

மூன்றாவது வருடமாக நடாத்தப்படும் இத்திலகார்ப்பண நிகழ்வில் எம் நாட்டின் மூத்த கலைஞர்களுள் ஒருவராகத்திகழும் **"ஈழத்துச் சீர்காழி"** எனப் போற்றப்படும் **திரு.செ.குமாரசாமி** அவர்களை கௌரவித்து அவர்களுடைய **"இசைவாழ்வும் பணியும்"** என்கின்ற இக்கையேட்டை வெளியிடுவதன் ஊடாக எனது குருவை நினைவு கூர்ந்து அவர் பாதம் பணிகின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விழாச்சிறக்கவும், இக்கையேட்டை தயாரிப்பதற்கும் எனக்குப் பூரண ஒத்துழைப்பை நல்கிய சங்கீதபூஷணம் செ.குமாரசாமி சேர் அவர்களிற்கும் அவர்தம் பாரியாருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் மனமுவந்த நன்றிகள் உரித்தாகுக. என்னோடு இணைந்து இவ்விழாச்சிறக்க பாடுபட்ட எனது குடும்பத்தினருக்கும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எனக்கு உறுதுணையாக இருந்து வருகின்ற எனது குருவின் குடும்பத்தினருக்கும், இதனை அழகிய முறையில் அச்சிட்டு தந்துதவிய S.S.R பதிப்பகத்தினரிற்கும் எனது மாணவர்கள், பெற்றோர்கள், பெரியோர்கள் அனைவரிற்கும் எனது உளம் கனிந்த நன்றியை தெரிவித்து மகிழ்கின்றேன்.

எனது இம் முயற்சியைத் தொடர்ந்தும் சீரிய முறையில் நடாத்திச் செல்வதற்கு அனைவரும் தத்தம் ஆதரவையும், வழிகாட்டலையும் தொடர்ந்தும் தரவேண்டும் எனப் பெரியோர்களை வேண்டி, இறைவனதும், எனது குருவினதும், ஆசான்கள் அனைவரதும் தாள் பணிந்து அவர்கள் ஆசியுடன் இக்கையேட்டை உங்கள் கைகளில் தவழ விடுகின்றேன்.

"சோமராகம்"
323/8D கோவில் வீதி
நல்லூர்.
யாழ்ப்பாணம்.
தொ.இல 021 222 5685

திருமதி குமுதா உமாகாந்தன்
"சோமராகம்" இசைமன்றம்
சென்.ஜோண்ஸ் கல்லூரி,
இசை ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கீதபூஷணம் திரு.செ.குமாரசாமி அவர்களின் இசை வாழ்வும் பணியும்

பிறப்பிடம் : **யாக்கரு வீதி, தெடுத்தனை, கரவெட்டி கிழக்கு, கரவெட்டி**

பெற்றோர் : **சு. செல்லத்துரை கண்ணகை தம்பதியர்**

பிறந்த காலம் : **10.01.1951**

இயற்கை வளம் சேர் கரவெட்டி நகரிலே வேளாள குலத்தவரான திரு.சு.செல்லத்துரை, திருமதி.செ.கண்ணகை தம்பதியரின் இல்லற வாழ்வின் நற்பயனாய் சிவகாமி என்னும் சகோதரி துணையுடன் குமாரசாமி அவர்கள் பிறந்தார். கலையுணர்வும், ரசிகத்தன்மையும் நிறைந்த குடும்பத்தில் பிறந்த இவர் சிறு வயது முதல் கல்வி, கலை, விளையாட்டு எனப் பல வித ஆற்றல்களுடன் விளங்கினார்.

## ஆரம்பக்கல்வி

தனது ஆரம்பக்கல்வியை 1957-1963 காலப்பகுதியில் யா/யாக்கரு விநாயக வித்தியாசாலையில் ஏழாம் வகுப்பு வரை கற்றார். தொடர்ந்து யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலத்தில் உயர்தரம் வரை கல்வி கற்றார். பாடசாலையில் கல்வி பயிலும் காலத்தில் தனது கல்விச் செயற்பாட்டிற்கு வெளியே இயல்பாகவே பார்த்ததை அவ்வாறே வரையக்கூடிய (Object Drawing) திறனையும், தனது காதால் கேட்டதை பாடும் திறனையும் கொண்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையில் நடைபெறும் இலக்கிய வட்டங்கள், கலைநிகழ்வுகளிலும் பாடி பலரது பாராட்டுக்களைப் பெற்றதுடன் தனது கிராமம் மட்டுமன்றி அயல் கிராம ஆலயங்களின் நித்திய, நைமித்திய விழாக்களில் பஞ்சபுராணம் ஓதுவதும், பாடல்களைப் பாடுவதும் இவரது பொழுதுபோக்காய் இருந்தன. இவையே இவரது இசை வளர்ச்சிக்கு அடித்தளமாகியது.

**இசைக்கல்வி**


இவரது இயல்பான இசைஞானமும், குரல் வளமும் கொண்ட இசைத்திறனைக் கேட்டுணர்ந்த இவரது மாமனார் ஆசிரியர் பண்டிதர் திரு.க.கணபதிப்பிள்ளை அவர்கள் தனது நண்பராகிய புங்குடுதீவைச் சேர்ந்த சங்கீதபூஷணம் ரி. இராசலிங்கம் அவர்களிடம் குருகுல முறைப்படி இரண்டு ஆண்டுகள் கற்றார். குமாரசாமி அவர்களிடம் இருந்த மனோதர்ம இசைத்திறனை இனங்கண்ட குருநாதர் அவரை இந்தியா சென்று இசை கற்கத் தூண்டினார்.

குருவின் ஆசீர்வாதத்துடன் 1973ஆம் ஆண்டு இந்தியா சென்றார். இவரைக் கூட்டிச் சென்ற பருத்தித்துறை கிருஸ்ணசாமி என்பவருக்கு இசைமேதை சீர்காழி கோவிந்தராஜனுடன் ஏற்பட்டிருந்த நல்லுறவின் அடிப்படையில் “சீர்காழி” யிடம் கூட்டிச்சென்று அறிமுகப்படுத்தினார். அதன் பிரகாரம் அவரது வீட்டிலேயே தங்கியிருந்து சில காலம் இசை கற்கும் வாய்ப்புக் கிடைத்தது. தொடர்ந்து “சீர்காழியின்” வழிகாட்டலில் தனது பட்டப் படிப்பினை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டார். அக்காலத்தில் திருப்பாம்புரம் ரி.என். சிவசுப்பிரமணிய பிள்ளை, மைலம் எம்.பி.வஜ்ரவேல் முதலியார், எஸ்.வேணுகோபாலையர் ஆகிய இசை மேதைகளிடம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகத்தில் மட்டுமன்றி தனிப்பட்ட ரீதியிலும் வரன் முறை தவறாது இசையைக் கற்று அவர்களின் ஆசீர்வாதங்களைப் பெற்று "சங்கீதபூஷணம்" பட்டத்தில் முதல்தர சித்தி பெற்றார்.

இந்தியாவில் கல்வி பயிலும் காலத்தில் ஆண்டு தோறும் நடைபெற்ற இசைப் போட்டிகளில் முதல் இடத்தைப் பெற்றும், தனது ஆசிரியர்களின் வழிகாட்டலில் பொது வைபவங்கள், விழாக்களிலும், சலாச்சாரப் பெரு விழாக்கள், சிதம்பர நடராஜர் சன்னிதானம், சிவகாமி அம்மன் சன்னிதானம், ஆயிரம்கால் மண்டபம், போன்றவற்றிலும் பாடியும் இசை நிகழ்ச்சிகளைச் செய்தும் பல பிரமுகர்கள், பெரியோர்களது பாராட்டுக்களையும், ஆசிர்வாதங்களையும் பெற்று தனது தாய் நாடாம் இலங்கைக்கும் கரவெட்டி ஊரிற்கும் பெருமை சேர்த்தார். இந்தியாவில் இசை பயிலும் காலத்தில் இவரது இசைத்திறன் காரணமாக நாதஸ்வரக் கலைஞராகிய மதுரை சேதுராமன் பொன்னுச்சாமி, சேஷகோபாலன், நடிகை அஞ்சலி தேவி, நடிகர்களான சாரங்கபானு, அஷோகன், ஜெயசங்கர் போன்றோருடன் பழகும் வாய்ப்புக்கள் கிடைத்தமை; இவரது இசைத்திறனுடன் பல தரப்பட்ட ஆற்றல்களை வளர்க்கவும் அனுபவங்கள் ஏற்படவும் வழிசமைத்தன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாவது அரங்கேற்றம்

தன் இசைக்கல்வியை முடித்து "சங்கீத பூஷணம்" பட்டம் பெற்று 1978ஆம் ஆண்டு தன் தாய் நாடு திரும்பினார். அவ்வேளை தன்னை இசையுலகிற்கு அறிமுகம் செய்யும் முகமாக பெரியோர்கள் உறவினர்களின் வேண்டுகோளிற்கு இணங்க தனது குலதெய்வமாகிய யாக்கரு சித்திவிநாயகர் தேவஸ்தான முன்றலில் 1978ஆம் ஆண்டு ஆனி மாதம் 19ஆம் திகதி அரங்கேற்றத்தை நிகழ்த்தினார். இதற்கு அணி செய் கலைஞர்களாக வயலின் : வி.கே குமாரசாமி அவர்களும் மிருதங்கம் : எஸ்.மகேந்திரன் அவர்களும் கலந்து கொள்ள சிறப்புற நிகழ்த்திக் காட்டினார்.

## மணவாழ்வும் சிறப்பும்

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் காலத்தில் தமக்கு இரண்டு வருடங்கள் பிந்திய நிலையில் இசையைக் கற்றுக்கொண்டிருந்த உடுப்பிட்டியைச் சேர்ந்த இராசரத்தினம், இராசலட்சுமி தம்பதியரின் புதல்வியான வரதலட்சுமியை மனம் விரும்பிக் கொண்டார். தனது சங்கீத பூஷணம் பட்டம் பெற்று இலங்கை திரும்பிய பின் 1978 ஆம் ஆண்டே பெற்றோர், பெரியோர் ஆசிர்வாதத்துடன் வரதலட்சுமியை திருமணம் செய்து கொண்டார்.

திருமதி வரதலட்சுமி அவர்கள் திருமணத்தின் பின் மீண்டும் இந்தியா சென்று தனது சங்கீதபூஷணப் பட்டத்தைப் பெற்று திரும்பினார். அவர்கள் இருவரதும் இல்வாழ்வின் பயனாய் மூன்று புதல்விகளையும் இரண்டு புதல்வர்களையும் பெற்றனர். சுகன்யா, சுரேந்தர், பிருந்தாவனி, வீணாவாகினி, சஜீவன் என்கின்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐவரும் வர்த்தகம், விஞ்ஞானம், கலை எனத் தத்தம் விருப்பிற்கேற்ப உயர்தரக்கல்வியை மேற்கொண்டு உயர்கல்வியை நல்ல நிலையில் முடித்து இன்று அவரவர்கள் துறைசார் தொழில் வாய்ப்பைப் பெற்று நன்முறையில் தத்தம் இல்வாழ்வை அமைத்து குழந்தைகளுடன் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் ஐவரும் தமது பெற்றோரின் இசைத்துறையைத் தொடர்ந்து கொள்ளவில்லை எனினும் இசைத்திறனும் ஞானமும் பெற்றவர்களே.

**தொழில்**

சங்கீத பூஷணம் பட்டம் பெற்று தன் தாயகம் திரும்பிய பின் யா/ வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்தில் முதல் ஆசிரிய நியமனம் பெற்று 24.05.1982 தொடக்கம் கடமையாற்றத் தொடங்கினார்.

தொடர்ந்து யா/ கரவெட்டி விக்னேஸ்வரா வித்தியாலயம் (01.01.1987 - 31.12.1996)

யா/ கம்பர்மலை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை,

யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்

(01.01.1997 – 09.06.1998) ஆகிய பாடசாலைகளில் கற்பித்தார். யா/ கம்பர் மலை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் இடைநிலை வகுப்புகளிற்கும் (6-11), யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலத்தில் உயர்தர வகுப்புகளிற்குமாக ஒரே காலகட்டத்தில் இரு பாடசாலைகளிலும் இரண்டு ஆண்டுகள் கற்பித்தார். யா/வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்தில் கல்வி கற்பிக்கும் காலத்தில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இணைந்து இரண்டு வருட தொழிற்பயிற்சி பெற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1985 – 1986)1997 ஆம் ஆண்டு தொழில் சார் கல்வித் தகைமையாக பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டம் பெற்றார். (PGDE) தொடர்ந்து 10.06.1998 – 09.01.2011 வரையான காலப்பகுதியில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் இசை விரிவுரையாளராக கடமையாற்றினார். இக்காலப் பகுதியில் பதவி நிலைத்தகைமையைப் பெறுவதற்காக அரச கல்வி நிர்வாக சேவை வகுப்பு-II (S.L.A.S – class II) இல் தேர்ச்சி பெற்றுக்கொண்ட ஒரு இசையாளன் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். 10.01.2011 இல் அரச பணியிலிருந்து ஓய்வு பெறும் வரையான இறுதி ஓராண்டு காலம் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை பிரதி அதிபராகக் கடமையாற்றியமை அவரது சேவைக்கும், கல்விக்குமான எடுத்துக் காட்டாக அமைந்தது.

ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளராக கடமையாற்றிய அதே வேளை கரவெட்டி தொலைக்கல்வி நிலைய ஆசிரியப் பயிற்சி மாணவர்களுக்கான இசைப் போதனா சிரியராகவும் யாழ்/ இராமநாதன் நுண்கலைக்கழகத்தின் இசை/ நடனத்துறை வருகை விரிவுரையாளராகவும், பிரதம தேர்வாளராகவும் இருந்து நெறிமுறை தவறாது நடுநிலைமையோடு சேவையாற்றியுள்ளார். இதே வேளை வட இலங்கை சங்கீத சபையின் ஆசிரியர் தரச் செயன்முறைப் பரீட்சைகளில் பிரதம தேர்வாளராகவும் ஆசிரிய கலாசாலை இறுதியாண்டு தேர்வுக்கான தேர்வாளராகவும் கடமையாற்றியதோடு அல்லாமல் இசை ஆசிரியர்களுக்கான சேவைக்கால கருத்தரங்குகளில் செயன்முறை அறிமுறைசார் விடய வளவாளராகவும் கலந்து நற்சேவையாற்றி வந்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இசைப்பணி

பாடசாலையில் கல்வி கற்கின்ற காலத்தில் மாணவர்களுக்கு இசையை கற்றுக் கொடுப்பதில் மட்டுமன்றி விசேட விழாக்கள், போட்டிகளிற்கு பயிற்சி கொடுத்து வெற்றியீட்டச் செய்தார். மாணவர்கள் சிறந்த பெறுபேறைப் பெறவும், சிறந்த பாடகராக மிளிரவும், தன்னிடம் இசை கற்ற மாணவர் பல்கலைக்கழக அனுமதி பெறவும் தன்னாலான சிறந்த பணியாற்றினார்.

இதே வேளை இசைக்கல்வியை பிரத்தியேகமாக இசை வகுப்புகள் மூலம் மாணவர்களுக்கு வழங்கி வந்தார். அவ்வகையில் குமாரசாமி அவர்களிடம் கற்று இன்று இசையுலகில் பிரகாசிப்பவர்களாக என்.ஜெயகௌரி, ஜெயபாரதி, ஜெயலட்சுமி, கிருஸ்ணானந்தன், ஜெயதர்சினி போன்றோரைக் குறிப்பிடலாம். மேலும் அரச சார்பற்ற இசை நிறுவனங்களாக விளங்கிய யாழ்ப்பாணம் ரசிகரஞ்சனசபா, நல்லூர் அண்ணாமலை இசைத்தமிழ் மன்றம் போன்றவற்றிலும் 1980 ஆம் ஆண்டு தொடக்கம் பல ஆண்டுகள் இசை வகுப்புகளை நடாத்தி வந்துள்ளார்.

பல நூற்றுக்கணக்கான மேடைகளில் காத்திரமான தனது குரலால் சபையை இன்று வரை மகிழ்வித்து வருபவர். ஆலயங்கள், பொது வைபவங்கள், கலாசார விழாக்கள், திருமணம் போன்ற சடங்குகளில் பஞ்சபுராணம் ஓதுதல், வாழ்த்துப்பா இசைத்தல் என அனைத்தையும் எதுவிதத் தயக்கமுமின்றி நிகழ்த்தி வந்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயங்களில் பண்முறைக்கேற்ப திருவூஞ்சல்பாக்களை இசைத்தும், நவசந்தி பண்களையும் தக்கமுறையில் பாடியும் வரும் இவர் அபிராமி அந்தாதி 100 பாடல்களையும் 100 இராகங்களில் பாடி வருதலும் குறிப்பிடத்தக்கது. ஆலய விழாக்களில் தனது தெய்வீக இசைக்கச்சேரியை நிகழ்த்தி வருவதோடன்றி பெருமை பாராது ஆலயக் கூட்டுப்பிராத்தனையில் ஈடுபட்டும், கூட்டுப்பிரார்த்தனையில் ஈடுபடும் மாணவர்களுக்கு கூட்டுப்பிரார்த்தனைப் பாடல்களையும், தேவாரங்களையும் கற்றுக் கொடுத்துப் பாடச் செய்தும் வருகின்றார்.

ஈழத்துக்குறும்படங்கள் சிலவற்றிற்கு பின்னணிப் பாடல்களைப் பாடியதுடன், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், இலங்கை ரூபவாஹினி ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் என்பவற்றின் 'A' தரப் பாடகராக இருப்பதோடு சக்தி T.V போன்றவற்றிலும் இசைக்கச்சேரி, பக்திப் பாமாலை, மெல்லிசை நிகழ்ச்சி, இசைச்சித்திரம் போன்றவற்றை நிகழ்த்தி வருகின்றார். 2012 ஆம் ஆண்டு லண்டன் சென்றிருந்தவேளை லண்டன் தீபம் தொலைக்காட்சியில் நேரலையாக நேர்காணல் நிகழ்வில் தமிழிசை பற்றிய உரையாடலில் கலந்து கொண்டமை புலம்பெயர் தமிழ் மக்களுடனான மீள் தொடர்பை வலுப்படுத்தியது எனலாம்.

இன்று வரை தம்மை நாடி வரும் இசையாசிரியர்களுக்கு பெருமை பாராட்டாது எதுவித மறுப்புமின்றி உருப்படிகளைக் கற்றுக்கொடுத்தும், புதிய இசை வடிவமைப்புச் செய்து கொடுத்தும் வருவது அவரது மிகமுக்கிய பண்பாகும். இவையெல்லாவற்றிற்கும் மேலாக கவித்திறன் மிக்க இவர் பல பாடல்கள், உருப்படிகளை இயற்றி மெட்டமைத்தது மட்டுமன்றி சுரப்படுத்தியுமுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றை அவர் ஆவணப்படுத்தாவிடினும், அவை பல ஆசிரிய மாணவர்களின் கைகளில் இன்றும் உள்ளன.

பல ஆலயங்களுக்கும் பக்தி நிறைந்த ஒலி நாடாக்களைப்பாடி வெளியிட்டுள்ளார். இவர் பிரம்மஸ்ரீ நா.வீரமணி ஐயா அவர்களுடைய பல பாடல்களையும், நாட்டிய நாடகங்களையும் பாடியதுடன் மேலும் பலர் இயற்றிய பாடல்களைக் கூட மெட்டமைத்துப்பாடி ஒலி நாடாக்களாக வெளியிட்டுள்ளார். இங்கு குறிப்பிடத்தக்க விடயம் என்னவெனில் தானே இயற்றிய பாடல்களைத் தானே இசையமைத்து ஒலி இறுவட்டுக்களாக வெளியிட்டமையாகும். இது அனைவராலும் செயற்படுத்தக் கூடிய விடயமன்று. இன்னும் பல பாடசாலைகள், மன்றங்கள், கலாசார நிறுவனங்களுக்கான பாடசாலைக் கீதம், மன்ற கீதம், நிறுவன கீதங்களைத் தானே இயற்றியும் மெட்டமைத்தும் பாடி வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்னிந்திய பக்திப்பாடல்களுக்கு இணையாகப் பாடப்பட்ட குறிப்பிடத்தக்க திருத்தலங்கள் சில.

1. நாயன்மார்கட்டு இராஜ இராஜேஸ்வரி அம்மன் கோவில்
2. கரணவாய் மூத்த விநாயகர் தேவஸ்தானம்
3. பருத்தித்துறை கோட்டு வாசல் அம்மன் கோவில்
4. ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கிருஷ்ணர் கோவில்
5. செல்வச்சந்நதி முருகன் ஆலயம்
6. வண்ணை காமாட்சி அம்மன் கோவில்
7. மானிப்பாய் மருதடி விநாயகர் கோவில்
8. முருகண்டிப் பிள்ளையார் கோவில்
9. வதிரி உல்லியன் ஒல்லை அம்மன் கோவில்
10. பொலிகண்டி கந்தவனக் கடவை முருகன் கோவில்
11. மூளாய் வதிரேஸ்வரர் ஆலயம்
12. பருத்தித்துறை சுப்பர்மடம் முனீஸ்வரன் கோவில்
13. பளை அறத்தியம்பாள் ஆலயம்
14. அனலை தீவு ஐயனார் ஆலயம்
15. சுதுமலை ஈஞ்சடி ஞானவைரவர் கோவில்
16. பன்னாலை மயிலையம்பதி அருள்மிகு சாமுண்டிகாதேவி சமேத ஞானவைரவர் கோவில்
17. திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோவில்
18. மட்டக்களப்பு மண்டூர்க் கந்தசுவாமி கோவில்
19. வல்வை முத்துமாரி அம்மன் ஆலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இவரால் மெட்டமைத்துப் பாடப்பட்ட பாடசாலை கீதங்கள்**

**நிறுவன கீதங்களுக்குரிய நிறுவனங்கள் சில.**

1. யா/ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி கீதம்
2. யா/ நவுண்டில் தாமோதர வித்தியாலய கீதம்
3. யா/ உடுப்பிட்டி சைவப்பிரகாச வித்தியாசாலை கீதம்
4. மட்டக்களப்பு தேசிய கல்வியயற் கல்லூரி கீதம்
5. கரவெட்டி பிரதேச சபை கீதம்.
6. உடுவில் பிரதேச சபை செயலக கீதம்
7. வேலணைப்பிரதேச செயலக கீதம்
8. யா/ கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி கீதம்
9. யா/ குடத்தனை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை கீதம் -2017

பலநாட்டிய நாடகங்களிற்கும், நாட்டிய நிகழ்வுகளிற்கும் பாடியுள்ளார். அவற்றில் திரு வேலாந்தனின் நாட்டிய நாடகம் பலவற்றிற்கு பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இலங்கையின் பல பாகங்களிற்கும் சென்று பல்வேறு மேடை இசைக் கச்சேரிகளை நிகழ்த்தியுள்ளார். இவரின் சாஸ்திரியம் பிறளாத தன்மையும், பக்தியும், ஜனரஞ்சகத் தன்மை கொண்ட பாடல் தெரிவும், கணீரென்ற குரலும், கம்பீரமும் பார்வையாளனை ஈர்த்து பரவசப்படுத்தும் தன்மை கொண்டவை. இதனாலேயே இன்றளவும் இவரது இசைக்கச்சேரிகள் விரும்பப்பட்டு வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இவருக்கு கிடைத்த பட்டங்களும் கௌரவங்களும்**

சென்னை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் காலத்தில் திருவாங்கூர் சுவாதித் திருநாள் மகாராஜா ஞாபகார்த்தமாக நடாத்தப்பட்ட இசைப் போட்டியில் தங்கப்பதக்கத்தைப் பெற்றார். பின்னர் அங்கு முதல் தர சித்தி பெற்று "சங்கீதபூஷணம்" பட்டம் பெற்று நாடு திரும்பிய இவர் தொழிற் தகைமையாக பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டத்தையும் பெற்றுக் கொண்டு சிறந்த ஆசானாக விளங்கிய அதே வேளை, சிறந்த ஆற்றுகையாளனாக, குரலிசைக் கலைஞனாக விளங்கியமைக்காக பல்வேறு நிறுவனங்களாலும் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

1. "ஞான பண்டித இசையரசு" – சந்நிதியான் ஆச்சிரம கலைப்பண்பாட்டு பேரவை 1993
2. "இசைமாமணி"- நாயன்மார்கட்டு சைவ அபிவிருத்திக்கழகம்
3. "கீதசாகரம்" – நெல்லியடி முருகமூர்த்தி சனசமூக நிலையம்
4. "கலைவாரிதி" – கலாசாரப் பேரவை – கரவெட்டிப் பரதேச செயலகம்
5. "இசைநாவலன்" - இயலிசைவாரிதி பிரம்மஸ்ரீ.நா. வீரமணி ஐயர்
6. "கலைவாரிதி" – வடமாகாணக் கல்வித்திணைக்களம்
7. "சங்கீதஞானி" - மூளாய் வாழ் புலம்பெயர் மக்கள்
8. "யாழ் ஓசைப்பெருவிழா விருது" – யாழ் மாநகரசபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. " உயர் தேசிய அரச இசை விருது" – சிறந்த பாடகருக் கான இசை விருது (ஆண்) – கலாசார அலுவல்கள் திணைக்களம் - இலங்கை – 2013

10. "தலைக்கோல் விருது" – கொழும்பு தமிழ் சங்கம் - 2015

11. " யாழ் முத்து விருது" – யாழ் மாவட்ட கலாசாரப் பேரவை 2016

இவற்றை விட இசை நிகழ்வுகளின் போதும், ஒலிப்பதிவுநாடா வெளியீடுகளின் போதும் ஆலயங்களாலும் நிறுவனங்களாலும் அவ்வப்போது இவரது திறனையும், சேவையையும் பாராட்டி, வாழ்த்தி கௌரவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இசைச்சிறப்பு**

"கரவைக்குமரன்" "கரவைவரதன்" போன்ற பெயர்களால் கலை உலகில் பிரகாசிக்கும் இவர் எவ்வாறு சீர்காழி கோவிந்தராஜன் "சீர்காழி" எனும் இடத்தின் பெயரால் சிறப்பித்துச் சுட்டப்படுகின்றாரோ அது போன்று கணீரென்ற ஓங்கிய குரலும், இசை பாடும் பாணியும் இவரை "ஈழத்துச் சீர்காழி" என்றே சிறப்பித்துக் கூற வைத்துள்ளது. "வடமராட்சிக் குமாரசாமி" என்று சிறப்பிக்கும் அதே வேளை "வடமராட்சி" பாடுகிறார் என ஊரின் பெயரால் சிறப்பிக்குமளவிற்கு இவரது இசைத்திறன் கரவெட்டி ஊரிற்கு மட்டுமன்றி வடமராட்சிக்கு மட்டுமல்ல அகில இலங்கைக்கே பெருமை சேர்ப்பதாகும்.

கணீரென்ற சாரீர வளமும், திடகாத்திரமான சரீர வளமும் கொண்ட இவர் மரபு வழி தவறாது இசை வழங்கும் சிறந்த ஆற்றுகையாளனாவார். இலங்கையின் அனைத்துப் பாகங்களிலும் தனது இசை நிகழ்ச்சிகளை நடத்தியுள்ள இவர், இசை கேட்க வரும் படித்தவர் முதல் பாமரர் வரை அனைவரையும் மதிமயங்கச் செய்யவல்ல செழுமை மிகு அரங்கக் கலைஞர். சாஸ்திரிய இசையில் மட்டுமன்றி பண்ணிசை, பக்தி இசை. மெல்லிசை எனப்பல்வகை இசை ஆற்றல் உடைய ஜனரஞ்சகம் நிறைந்த பாடகராவார்.

சுருதி, லய சுத்தமும் தமிழ்மொழியை சீரிய முறையில் உச்சரிக்கும் முறையும் சாகித்திய பாவத்துடன் பாடும் தன்மையும் ஓங்கி ஒலிக்கும் வளமான குரலும் கேட்போர் அனைவரையும் அவர்பால் ஈர்த்துக் கொண்டு விடும். தனது இசைக்கச்சேரிகளில் தானேயாத்த பாடல்களையும் சேர்த்துக்கொண்டு பாடுவதோடு சுமநிசரஞ்சனி, வாசந்தி, ஸ்ரோதஸ்வினி, திரிவேணி போன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபூர்வ ராகங்களையும் நுணுக்கமாகவும் லாவகமாகவும் இனிமையாகவும் பாடும் ஆற்றல் உடையவர். "தர்பாரி கானடா" ராகம் இவருக்கேயுரிய சொத்து என்றே கூறுமளவிற்கு இவரது குரலும் இவ் ராகமும் இணைந்து கேட்க மிக இனிமையாக இருக்கும்.

ஈழத்துச் சைவ ஆலயங்களில் "சீர்காழி" போன்ற தென்னிந்திய பாடகர்களின் பக்திப்பாடல்கள் ஒலித்த வேளை அவற்றிற்கு இணையாக ஒலிக்கவிடப்பட்ட பக்திப் பாடல்கள் "ஈழத்துச் சீர்காழியாம்" இவருடையதேயாகும். அந்தளவிற்கு பல்வேறு ஆலயங்கள் மீதும் பக்திரசம் ததும்பும் ஒலி நாடாக்களையும், இறுவட்டுக்களையும் பாடியுள்ளார். இயலிசை வாரிதி ந.வீரமணி ஐயர் போன்றோர் இசையமைத்த பாடல்களைப் பாடியும், அவர் போன்ற பலரால் ஆக்கப்பட்ட பாடலுக்கு தான் இசையமைத்தது மட்டுமன்றி பெரும்பான்மையான பாடல்களைத் தானே ஆக்கி இசையமைத்துத் தனது குரலிலேயே பாடியமை மிகவும் போற்றுதற்குரிய விடயமாகும். ஆலயங்கள், கல்விக்கூடங்கள், கலாசார நிறுவனங்கள் பலவற்றில் இவரது குரல் ஒலித்த வண்ணம் இன்றும் உள்ளன.

தான் இசையமைத்த பாடல்களையும் சரி, ஏனைய பாடல்களையும் சரி ஸ்வரப்படுத்தி எழுதும் திறன் கொண்ட கலைஞர். இன்று பலருக்கு ஸ்வரத்தை வைத்து சாகித்தியம் பாடத்தெரியாத நிலை ஏற்பட்டுள்ள வேளை, பாடல்களுக்கு ஸ்வரப்படுத்தும் முறை இயந்திர மயப்படுத்தப்பட்டுள்ளது. ஸ்வரசாகித்தியமாக கற்பிக்கும் முறையும் அருகி விட்டது. எவ்வாறு எமது இயந்திர உலகில் "அவசர உணவுகள்" இடம்பிடித்துள்ளனவோ அது போன்று ஒலி இறுவட்டுகளிலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைத்தொலைபேசியூடாகவும், "Youtube" மூலமும் கேட்டுப்பாடும் தன்மையே அதிகரித்துள்ளது. இதனால் ஸ்வர சாகித்திய, சங்கதி சுத்தமும், மனோதர்மமும் அற்ற கச்சேரி தர்மம், ஒழுங்குமுறை தெரியாத ஒரு இசைச்சமூகம் வெளிவந்து கொண்டிருக்கும் இவ்வேளை இவ்வாறான மூத்த இசைக்கலைஞர்களின் இசைவாழ்வு எமக்கு முன்னுதாரணமாகும்.

ஈழத்துக்கேயுரிய தனித்துவமான பக்திப்பாடல் மரபை உருவாக்கிய முன்னோடியாகத் திகழும் இவரால் பாடப்பெற்ற நூற்றுக்கணக்கான பாடல்கள் இறுவட்டுக்களாக வெளிவந்துள்ளன. ஆசிரியப்பணியில் முப்பத்தைந்து ஆண்டுகள் சேவையாற்றிய இவர் ஒரு ஆசானாக, விரிவுரையாளனாக, அரங்கக் கலைஞனாக, பாடகனாக, பாடலாசிரியனாக, கல்வியாளனாக, பண்பாளனாக, பன்முக ஆற்றலும் ஆளுமையும் கொண்டவர். சங்கீத பூஷணம் திரு.செ. குமாரசாமி அவர்கள் தனது கல்விக் காலத்தில் காணும் காட்சிகளை அவ்வாறே வரைகின்ற ஆற்றல் உடையவராக விளங்கியமை குறிப்பிடத்தக்கது.

அவரது கைவண்ணத்தில் உருவான சில ஓவியங்கள் இன்று பார்க்கும் போதும் மலைப்பை ஏற்படுத்துகின்றன. ஏனெனில் நல்லதொரு ஓவியனை இனங்கண்டு கொள்ளவில்லையோ என எண்ணத் தோன்றுகின்றது. எனினும் அதனை அவரது இசைப்புலமை மேவி நிற்கின்றது என்பதே உண்மை.

பட்டக்கல்வியொன்றைப் பெறும் நோக்குடன் இசையைக் கற்கின்ற நூற்றுக்கணக்கான எம்மவருள் ஒரு சிலரே சிறந்த இசைக் கலைஞனாக அரங்கக்கலைஞனாக வெளிவர முடிகின்றது. அது போன்று ஒரு சிலரே நல் ஆசிரியர்களாகவேனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாகின்றனர். இசைக்கலைஞனாக, ஆசிரியனாக எனும் இரு பரிமாணத்திலும் சரிசமனாகக் காலூன்றி நிற்போர் இவர் போன்று ஒரு சிலரே.

எனவே இசையைக் கற்போர் ஒரு ஆசானிடம் நேரடியாகச் சென்று ஸ்வர சாகித்திய சுத்தமாக சங்கதி வேறுபாடுகளை உணர்ந்து லய நுட்பங்களை அறிந்து கற்றல் வேண்டும். இதன் மூலமே சிறந்த இசையாளனாக நல்லாசானாக உருவாக முடியும் என தனது ஆசிரியப் பணியின் அனுபவ வாயிலாக கூறுகின்றார். எமது மூத்த இசைக்கலைஞர்களுள் இன்று வரை குரலில் இனிமை மாறாத அரங்கக் கலைஞனாகத் திகழும் சங்கீத பூஷணம் திரு.செ. குமாரசாமி அவர்கள் தேடலும், சுயகற்றலும், தன்னம்பிக்கையும் நிறைந்த பூரணத்துவமான பன்முக கலைஞராவார். இவரது கலைவாழ்வும், பணியும் எமது இளஞ்சமுதாயத்திற்கு சிறந்த எடுத்துக் காட்டாகும். இவர் எமது சமூகத்திற்கும் எம் நாட்டிற்கும் கிடைத்த வரப்பிரசாதமேயாகும். அவர் புகழ், அவர் சேவை, எங்கும் ஓங்கி நிற்கும்! அவர் குரல் திசையெங்கும் ஒலித்து நிற்கும்! இச்சீரிய கலைஞனின் தாழ் பணிந்து போற்றுவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கீத பூஷணம் செ.குமாரசாமி அவர்களால் ஆக்கி ஸ்வரப்படுத்தப்பட்ட உருப்படிகள் சில

### கீர்த்தனை

இராகம் : ஹிந்தோளம் ஆ : ஸகமதநிஸ் } 20இல்
தாளம் : ஆதி அ : ஸ்நிதமகஸ } ஜன்னியம்

| \|4 | 0 | 0 |
|---|---|---|
| | பல்லவி | |
| 1. ஸ்ா;; தாநிதமா - காமா/<br>ஹிந் .தோ .ள ரா. | கஸநிநிஸ – தாநி/<br>கம் பா . . . டி . . | ஸகமக ஸா;//<br>ம . கிழ் . வோம் |
| நிநிஸாகா - காமா; தா-கா/<br>சங்..கீ. தஞா. ணந்தி | மா நிஸ்ா – தநீ/<br>கழ் ஸ்வர லய | மாத காமததி//<br>தாள பாவமொடு |
| 2. நிஸ்காஸ்நி தா-தநிஸ்ாநித மாகாமா/<br>ஹிந் . .தோ . . . .ளரா | கஸ – நிநிஸ் - தாநி/<br>கம் . பா . . டி . . | ஸகமக ஸா;//<br>ம. கிழ். வோம் |
| ஸநிஸா காமக கா மா; தா கா/<br>சங் .கீ . . தஞா. ..ணந்தி | மா – நிஸ்ா – தநீ/<br>கழ் ஸ்வர. லய. | மாத – காமததி//<br>தாள பாவமொடு |
| 3. ஸ்க் ம்க்ஸ்ாஸ்நிக்ஸ்தா-மததநி/<br>ஹிந் . . தோ . ள ரா. . | நிஸ் -க்ஸ்நி – தமத/<br>கம் . பா . . டி . . | காதாமக ஸா;<br>ம கிழ் . . வோம். |
| ஸநிஸா காமக காமா;தாகா/<br>சங் . கீ . . த ஞா.ணந்தி | மா நிஸ்ா – தநீ/<br>கழ் ஸ்வர லய | மாத காமதநி//<br>தாள பாவமொடு<br>(ஹிந்தோள) |
| | அனுபல்லவி | |
| 1. ;, காமதா- நிததா ; காமா/<br>. . மந்த மா ரு .தம் . தவழ் | ; த நீ ஸ் நீ/<br>. மா மலர்ச் | ஸ்ாநிததாநீஸ்ா//<br>சோ . .லையில் |
| ஸ்ா, க்ஸ்ா,க்ம்க் ஸ்ாஸ்நிநிதநிநிஸ்ா/<br>மா . . .ங்கு யில்பா டிட | ; ஸ் நீ த மா/<br>. மா .ம யில் | காதமகாமகஸா//<br>ஆ . .டி . . ட |
| 2. ;, காம தரிஸ்ா நிததா; காமா/<br>. . மந்த மா . ரு. தம் தவழ் | ; தநீஸ் நீ /<br>. மா .மலர்ச் | ஸ்ாக்க் ஸ்நிஸ்ா//<br>சோ. . லை .யில் |
| ஸ்ா, க்ஸ்ா, ம்ம்க் ஸ்ா ஸ்நிநிதநிஸ்கா/<br>மா ....ங்கு..யில் பா...டி . ட | மக்ஸ் - க்ஸ்நி -ஸ்நி/<br>ம . . ம . . யில் | த– நிதம – கமதநி//<br>ஆ . . . டி .ட<br>(ஹிந்தோள) |
| | சரணம் | |
| ; ,மாம மா, மா ; மாதம கா /<br>. சந்தி ர ஜோ .தி . ..லை | ;, கா த மா/<br>. .சா ம ரம் | மகதம – மகஸா//<br>வீ . . . ச . வும் |
| ;, ஸாமகா - ஸநிகஸநிநிதா/<br>. .சந்தனக் குங் . . கு..மம் | ; , ஸா மா க/<br>. . ஜவ் வா து | மா, தகாமா//<br>பூ . . சவும் |
| ;, காமதா – நீஸ்நி தா நீஸ்ா/<br>இந்திர வில் . . ...லினில் | ; , நிஸ்ாஸ்ஸ்ா/<br>. எழில் வந்து | ஸ்க்ஸ்நிதா – நீஸ்ா//<br>சே . . . . .ரவும் |
| ; , காமதா – நீஸ்நி தாநீஸ்ா/<br>. . இந்திர வில் . . லினில் | ; ஸ்ாம்க: க்ம்ஸ்ா/<br>. எழில் . வ. ந்து | ஸ்க்ஸ்நிஜதா–நீஸ்ா//<br>சே . . . . . .ரவும் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ;, ஸ்ாம்ஸ்ா - ஸ்நிக்ஸ் தாநிநிஸ்ா/<br>. . ஈசனின் நா . . . .ட் டிய<br>;, ஸ்ாம்ஸ்ா - ஸ்நிக்ஸ் தாநிநிஸ்ா/<br>. .ஈசனின் நா . . . ட். டிய | ; நிஸ்ா தமா/<br>. இசை யென<br>ம்க்ஸ்நி – க் ஸ்நித/<br>இ .சை. யெ . ன | காதம காமக ஸா//<br>கூ .ட்டு . . வோம்<br>ஸ்நிதம – கமததி //<br>கூ. .ட்டு வோம். |

## கீர்த்தனை

இராகம் : தர்பாரி கானடா
தாளம் : ஆதி

ஆ : ஸரிமபதாநிஸ்
அ : ஸ்நிபமகாமநிஸ
20இல் ஜன்னியம்

| \|4 | 0 | 0 |
|---|---|---|
| | பல்லவி | |
| 1.ஸ்ா;,நிபா கா;, மரீ/<br>யார்..அறி வார்..குகன் | ஸா; ஸா; /<br>லீ . லை | ;; நிரி ஸா/<br>. .வி. ளை |
| ஸா;; ரிம பநிமபா- மபா/<br>யா. .டுவ தே. . அவன் | நிஸ்ா, ஸ்ா; /<br>வே . . . .லை | ஸ்நிநிபபமரிம//<br>. . . . . . . . . . . |
| 2.பநிப ஸ்ாநிபா பமகா,மரீ/<br>யா. . ர்அறி வா. .ர் .குகன் | ஸா ; ஸா; /<br>லீ . லை. | ; ; நிரி ஸா//<br>. . வி. ளை |
| கமரிரிமபமாபதமபா– மபா/<br>யா . .டுவதே. . அவன் | நிஸ்பநி– மபகம/<br>லீ. . . . லை . . | ரிஸரிம பநிமப//<br>. . . . . . . . . |
| 3.பநிபஸ்ா நிபாகா ;, மரீ/<br>யா. .ர் அறிவார் . குகன் | ஸா; ஸா; /<br>லீ . லை. | ; ; ; ; /<br>. . . . |
| | அநுபல்லவி | |
| ; ,மாமமாபா, - ததா நீ/<br>. .சீரலைவாய். பதி.யென் | பா- மபாதாநி/<br>று செல்வச்சந்நி | ஸ்ா, நிரீஸ்ா//<br>தி . யமர்ந்த |
| ; , ஸ்ாரீப் க்ா, ம்ரீஸ்ா/<br>. . சிங்கார வே லனடி | ;பா ஸ் நீ ப /<br>.செல்வமுத்துக் | ககாமரீஸா//<br>கும ர னடி |
| பநிபஸ்ா நிபாகா; , மரீ/<br>யா. . ர் அறிவார் . .குகன் | ஸா; ஸா; /<br>லீ. லை . | ; ; ; ; //<br>. . . . |
| | சரணம் | |
| ; காக காமரீ, ஸஸாஸா/<br>.குன்று தோறும்..நின்றாடல் | ; நிஸா தாநி/<br>. புரி கின்ற | ஸஸாநிரீஸா//<br>கு ழ க் ன டி |
| ;,நீஸ ரிரீரீ, மஸாரீ/<br>.கோலமயில்வா. க ன டி | ; ஸா ரி ம மா/<br>. குஞ்ச ரி யாள் | பா, நிமாபா//<br>பங். க ன டி |
| ;, மாமாமபா, ததாபா/<br>. . இன்றிங்கே வந். தமர்ந்த | ; மா ப தா நி/<br>. எ ன் இத யத் | ஸ்ா, நிரீஸ்ா//<br>தெய். வ ம டி |
| ; நீ ஸ் ரீப் க்க்ாம் ரீஸ்ா/<br>. ஏழிசையாய் இசைப்ப யனாய் | ; பஸ்ா நிபா/<br>. எனக் கருள் | ககாமரிஸரிம//<br>தந்தை . ய. டி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | மத்திமகால சாஹித்தியம் | |
|---|---|---|
| நிநிஸா, நீஸ் . ரி ரி ரீ; ;/<br>குருவாய் .நெஞ்ச த்திருவாய்<br>நிஸரீ, மாம ப ப பா ; ;/<br>அருவாய் விந்தை உருவாய்.<br>நிஸ்ஸஸ- நிஸஸஸஸ ரிஸநிஸரிரீ/<br>குருபர சரவண பவ குகசுதனாய்<br>மமமம-பபப- தததத-நிரிஸா/<br>கரஹர சிவனருள் அருமறைஅமுதாய் | க ம ரி ஸா தாரி/<br>கருவாய் உள்ளத்<br>மபமாபதபாகாம/<br>வருவா.ன்.காட்சி<br>ரிமமப நிபமப/<br>குடிலையின் வடிவுறு<br>ஸ்ஸ்ரிப் -க்க்ம்ரி/<br>அடியனின் மனதினில் | ரிஸஸா;; //<br>துணர்வாய் ..<br>ரிரிஸா;; //<br>தருவான்..<br>ககமரிரிஸஸா//<br>குமரநன் மணியாய்<br>ஸ்ரிஸ் நிபமபநி//<br>அனுதினம்வருவான்<br>(யாரறிவார்) |

## பதம்

இராகம் : ஷண்முகப்பிரியா<br>
தாளம் : ஆதி


ஆ : ஸரிகமபதநிஸ் } 56வது<br>
அ. : ஸ்நிதபமகரிஸ


| I₄ | 0 | 0 |
|---|---|---|
| | பல்லவி | |
| ;பதா நி ஸ்ா நிதஸ்நீதத ப/<br>.சுந். த ரன் யார் சொல் ல<br>;பதா நிநீ ஸ்நிஸ்ா, நிதாநீ/<br>.வந். தவன் ஊ .ர் சொல் ல | பா ; ; ; /<br>டி . . . .<br>ஸா ; ; ; /<br>டி . . . | பதநிததபமா//<br>தோ .ழி . .<br>பதரிஸ்நிதபத//<br>தோ ..ழி . .<br>(சுந்தரன்) |
| | அனுபல்லவி | |
| ; ,ரீ நீஸ்ரீ, ஸ் க்ா ரீ/<br>. .சிந் தூரப் பொட் ட ணிந்து<br>; நீக் ரீக் - ரீக்ரிஸ்ாநிநீஸ்ா/<br>. விந்தைமயல் செய் . .தெனது | ; ,ரி க்ா ரீ /<br>. .செவ் வேல்<br>ஸ்ாரிஸ்ஸ்ாநீஸ்நிநீ தா/<br>விந் . . தை. .. பு | ரிக்ாரீக்ரி, ஸ்ா//<br>கரம்கொண் டு<br>பா, பதா நித//<br>குத். தொணித்த<br>(சுந்தரன்) |
| | சரணங்கள் | |
| ; பாதபதாபா, ததபமா/<br>. நீலமயில் ஏ . றிவந் து<br>; காமபபாகமா கரீஸா/<br>. நீங்கா . த பக் .தி கொண்டு<br>; , ரீ நீஸ் ரீ, ஸ் க்ா ரீ/<br>. .கோலக் கும . ர ன டி | ; பாதநிஸ்ா/<br>. நித்திரையில்<br>; ரிஸரிகமா/<br>. நிலைக்கவிழ்க்<br>; , ரிக்ா ரீ/<br>. . குங் கு ம | தநீ த தா பா//<br>மனம் கலந் தான்<br>த ஸ்ா நிதாபா//<br>குறும்பு செய்தான்<br>ரிக்ா ரீக்ரி ரிஸ்ா//<br>வண் ண . .னடி |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| **; நீக்ரீக் ரீக்ரிஸ்ா நி நீஸ்ா/**<br>. கோ .தையே என் .மனம்<br><br>செல்வச் சந்நிதி நின்றான்<br>திருத்தணிகை பரங்குன்றம்<br>முல்லை மலர்ந்த அவன் மோகனப்<br>முழுவதும் மயங்கிய தே மொய் | **ஸாரிஸ்ஸா- நீஸ்நிநீதா/**<br>குழைந்து ம . .கிழ<br><br>செந்தூர்ப்பதி<br>திருப்பதிகள்<br>புன்னகை<br>குழலே நீ | **பா, பதாநித//**<br>வர. .த . .<br>(சுந்தரன்)<br>யென்றான்<br>என்றுரைத்தான்<br>யென்னை<br>அந்தச்<br>(சுந்தரன்) |

**திரு. செ. குமாரசாமி அவர்கள் கைவண்ணத்தில் சில.**









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது மனைவி குழந்தைகளுடன்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2017ஆம் ஆண்டு நல்லூர் முருகன் தெய்வீக இசையரங்கு :-**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org